# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

(**ஜாமக்காரனில்**) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 8 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 5**
**MAY 2024 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

உங்கள் யாவரையும் இயேசு கிறிஸ்தவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

என் வாசகர்களின் ஆத்துமாவுக்கு எது பிரயோஜனமோ அப்படிப்பட்ட செய்திகளை நான் எழுதுவேன். அல்லது மற்ற ஊழியர்களின் செய்திகளை நான் வாசித்து அது வாசகருகளுக்கு பிரயோஜனமாக இருக்குமானால் அதை அப்படியே ஜாமக்காரனில் வெளியிடுவேன். பலர் அதை வாசித்து அந்த செய்தி தங்களுக்கு எவ்வளவு பிரயோஜனமாக இருந்தது என்பதை உடனே அறிவிப்பார்கள்.

2020ம் வருடம் **கொரோனா வியாதி** படுக்கையில் படுத்து கர்த்தரின் கிருபையால் உயிர் பிழைத்து சுமார் இரண்டு வருடங்கள் எந்த ஊழியத்துக்கும் போகாமல் வீட்டிலேயே படுத்திருந்தேன்.

அதனால் வாசகர் அனுப்பிய கணிக்கைகளுக்கு, கடிதங்களும் emailகளுக்கு எந்த பதிலும் எழுத முடியாமல் போனது. 2024 மே மாதம் முதல் எல்லாருக்கும் கொஞ்ஜ கொஞ்ஜமாக பதில் எழுதி அனுப்பிக்கொண்டிருக்கிறேன்.

தாமதமாக பதில் எழுதியதற்கு பொருத்துக்கொள்ளவும், என் பதில்

# MAY - 2024

கிடைக்காமல் போனாலும், கோபப்படாமல், சலித்துக்கொள்ளாமல் தொடர்ந்து காணிக்கை அனுப்பிக் கொண்டிருந்த வாசகர்களுக்கும் இப்போது காணிக்கை அனுப்பி கொண்டிருக்கும் அன்பர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

## ஊழியம் செய்தால் சம்பள் எவ்வளவு கொடுப்பார்கள்

கடந்த மாதம் ஒரு கன்வென்ஷனில் பிரசங்கித்தபின் அன்று இரவு வாலிபன் ஒருவன் என்னிடம் ஜெபிக்க வந்தான். தான் இரட்சிக்கப்பட்டு நான்கு வருடமாகிறது என்றும் B.Sc., வரை படித்திருப்பதாகவும் கூறி, அவர்கள் சபையின் பாஸ்டர் இந்த வாலிபனை அடிக்கடி **துதி ஆராதனை** நடத்த அனுமதித்ததாகவும், இப்படி தன் அனுபவங்களை பகிர்ந்துகொண்டான்.

சரி, இப்போது நான் என்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவன் **டிரைபல் மிஷன்** ஆரம்பித்தது **நீங்கள்தான்** என்று கேள்விப்பட்டேன். டிரைபல் மிஷன் சார்பில் **பெத்தானி ஹாஸ்பிடல்** ஆரம்பித்த **ஸ்தாபகர்களில்** நீங்கள் முதன்மையானவர் என்றும் கேள்விப்பட்டேன். நான் ஊழியம் செய்ய ஒப்புக் கொடுத்திருக்கிறேன். ஆகவே நீங்கள் ஒரு **சிபாரிசு லெட்டர் எழுதி** கொடுத்தால் **ஆனைக்கட்டி பெத்தானி ஆஸ்பத்திரியிலோ,** மிஷனரி **சபையிலோ** நான் ஊழியம் செய்ய உதவி பெற்றுத்தர வேண்டுகிறேன் என்றார். அதோடு உங்கள் ஸ்தாபனங்களில் ஊழியம் செய்தால் **எவ்வளவு சம்பளம்** கிடைக்கும் ? என்றார்.

உடனே அந்த தம்பிபை உட்கார வைத்து தம்பி **ஊழியம்** என்பது **சம்பளத்தின்** அடிப்படையில் அல்ல என்பதை தெரிந்துகொள்ளுங்கள். உங்கள் கேள்வியே நீங்கள் ஊழியம் செய்ய **தகுதியற்றவர்** என்று விளங்குகிறது. கையில் வேத புத்தகம் வைத்திருக்கிறீர்களா? என்றேன். இல்லை, ஆனால் **மொபைலில் முழு வேதாகமமும்** உண்டு என்றார்.

**அப்போஸ்தலர்** புத்தகத்தை எடுக்க சொல்லி அதில் **9ம் அதிகாரத்தை** வாசிக்க சொல்லி விளக்கினேன். கிறிஸ்தவர்களை தேடி கண்டுபிடித்து கொலை செய்து கொண்டிருந்த **சவுல்** என்பவனை குறித்து அதில் எழுதப்பட்டிருந்தது. அவன கிறிஸ்தவர்களை கண்டுபிடித்து கொலைசெய்ய பிரயானம் செய்து போகையில் **இயேசு கிறிஸ்து** அவனுக்கு தரிசனமானார். சடுதியாக **வானத்திலிருந்து ஒரு பிரகாசம்** வந்து சவுலின் **கண்களை குருடாக்கிபோட்டது.** சவுல் குதிரையிலிருந்து கீழே விழுந்து **மனம் திரும்பி** இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டான். அவனை, வீட்டில் போய் இரு, நான் ஒரு சீஷனை உன்னிடம் அனுப்புவேன். அவன் உன் தலையில் கை வைத்து ஜெபிப்பான். அப்போது நீ பார்வையடைவாய் என்றார். அப்போது சிலர் அவனை பிடித்துகொண்டுபோய் வீட்டில் விட்டார்கள்.

இப்போது இயேசு கூறியபடி **அனனியா** என்பவனை அவனிடம் போய் ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். அவன் தயங்கினான். ஆண்டவரே **அவனுக்கு பயந்துதான்** நாங்கள் இங்கு ஒளிந்து கொண்டிருக்கிறோம், **அவனிடமே** என்னை அனுப்புகிறீர்களே! என்றான். அதற்கு இயேசு கிறிஸ்து சவுலை என் ஊழியக்காரனாய் தெரிந்து கொண்டேன். ஆகவே பயப்படாமல் போ என்று கூறி மேலும் நான் அவனை **என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டும் என்பதை நான் அவனுக்கு காண்பிப்பேன் என்றார்.** (அப்.9:15,16)

இதுதான் தம்பி, **கிறிஸ்தவ ஊழியத்தின் தகுதி நீ சம்பளம் எவ்வளவு** என்று ஆரம்பத்திலேயே கேட்கிறாயே! கிறிஸ்தவ ஊழியம் என்பது **தியாகத்தின்** அடிப்படையிலும் நன்றியின் அடிப்படையிலும் செய்வதாகும். **Dr. முரளிதர்,** M.D. அவர்கள் இருதய வியாதி நிபுனர். சுமார் இரண்டு லட்ச ரூபாய் சம்பளத்தை விட்டுவிட்டு இன்று தியாகத்தோடு காடு மேடெல்லாம் நடந்து **கிறிஸ்துவே தெய்வம்** என்று சுவிசேஷம் அறிவித்தார்.

**Dr. புஷ்பராஜ்** ஆகிய நான் முதல் மிஷனரியாக ஒப்புக்கொடுத்து **பெரியமலை** என்ற அடர்ந்த காட்டு பகுதிக்கு **இரண்டு** சகோதரர்களோடு ஊழியம் செய்ய சென்றபோது **பன்றிகள்** அடைத்து வைக்கும் **ஓலை குடிசையில்தான்** நாங்கள் மூன்று பேரும் படுத்து உறங்கி சுற்றியுள்ள கிராமங்களுக்கு சென்று **சுவிசேஷம் அறிவித்தோம்.** அப்போது எனக்கு **மிஷனரி ஸ்தாபனம்** கொடுத்த சம்மபளம் எவ்வளவு தெரியுமா? 350/- ரூபாய் இதில் வீட்டு செலவுக்காக, என் பெற்றோருக்கு கொஞ்சம் பணம் அனுப்பி மீது ரூபாயில் அரிசி வாங்கி **கஞ்ஜி வைத்து குடித்து** ஊழியத்துக்கு புறப்பட்டு இரவு திரும்புவோம். 3 நாட்கள் பட்டினி கிடந்தோம். ஆரம்பத்தில் ஊழியத்தில் இந்த குறைவின் மத்தியில், **பாம்பு,** தேள், **பூரான்,** யானைகள் நிறைந்த காட்டில் தங்கி ஊழியம் செய்ததால் **இன்று கர்த்தர் என் 84 வயதிலும்** ஒரு குறையும் இன்றி, என்னையும் Dr. முரளிதர் அவர்களையும் தெய்வம் பிரச்சனைகள், குறைகள் எதுவும் அனுமதிக்காது காத்து வருகிறார். எதற்கு இதை கூறுகிறேன் என்றால் ஊழிய ஆரம்பத்திலேயே கர்த்தருக்காக, ஊழியத்துக்காக **குறைகளை** சகித்து கஷ்டங்களையும் தாங்கி **முறுமுறுக்காமல்** ஊழியம் செய்ததால்தான் இன்று **சகல சவுகரியத்தோடும்** வாழ்கிறோம். ஆரம்ப காலத்தில் **நடந்து** ஊழியம் செய்தோம், **சைக்கிளில்** இருவராக மூவராக பிரயானம் செய்து ஊழியம் செய்தோம். அதன்பின் **சின்ன மோட்டார் சைக்கிள்** வாங்க கிருபை செய்தார் ஒரு வருடத்துக்குள்ளாகவே பெரிய பணக்காரர்கள் ஓட்டும் **புல்லட்** (Royal Enfield) என்ற பைக்கை இலவசமாக கிடைக்கச் செய்தார். அதன்பின் **திரீ வீலர் & ஆட்டோ** ரிக்ஷா வாங்கினோம். அதன் பின் **ஆம்னி** வேன் வாங்கினோம். அதன்பின் அதை விற்று **மாருதி 800** என்ற கார் வாங்கினோம். அதன்பின் Falio (Fiet) கார் வாங்கினோம். பின்பு அதை விற்று இப்போது Nano என்ற **சிறிய கார்** வாங்கி அதை உபயோகிக்கிறோம்.

நாட்டு ஒடு வேய்ந்த **வாடகை வீட்டில்** 40 வருடங்கள் வாழ்ந்தோம். அதன்பின் **அதே வீட்டை சொந்தமாக** வாங்க கர்த்தர் உதவி செய்தார். இன்று 84 வருடமாக **அதே வீட்டில் வாழ்ந்து** ஊழியம் செய்கிறோம். **உண்மையான ஊழியர்கள்** யாரும் **ஆரம்ப காலத்தில்** பசி, பட்டினி, பண கஷ்டம் இவைகளை அனுபவிக்காமல் பெரிய அளவில் முன்னேறியதில்லை. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. இப்போது **நாங்கள் பணக்காரர்கள்** அல்ல. கர்த்தரின் கிருபையால் **சகல வசதியுடன், கடன் இல்லாத** வாழ்க்கை வாழும் **சாதாரண ஊழியர்கள்** ஆகும்.

இயேசு கிருஸ்துவின் **சீஷர்களிலேயே** அல்லது **அப்போஸ்தலர்களிலேயே** மிக **அதிகம் படித்தவர்,** உயர் **பதவியில்** இருந்தவர், அனைத்து **சுகத்தையும்** அனுபவித்தவர் **பவுல்** அவர்கள் ஆகும். கிருஸ்துவின் ஊழியத்தில் மிக அதிக பாடுகளை அனுபவித்தவர். அவ் எவ்வளவு கஷ்டங்களை அனுபித்தார் என்று கீழே வசனம் எழுதுகிறேன் அதை வாசித்து பாருங்கள்.

பவுலே தன்னைப்பற்றி இப்படி எழுதுகிறார் 2 கொரி 11:23

1. நான் அதிகம் பிரயாசப்பட்டவன்
2. நான் அதிகமாய் அடிப்பட்டவன்
3. நான் அதிகமாக காவலில் வைக்கப்பட்டவன்
4. அனேக தரம் மரண அவதியில் அகப்பட்டவன்
5. யூதர்களால் ஒன்று குறைய நாற்பது அடிகளாக ஐந்து தரம் அடிப்பட்டேன்
6. மூன்று தரம் தடியால் அடிப்பட்டேன்
7. ஒரு தரம் கல்லெரியுன்டேன்
8. மூன்று தரம் கப்பற் தேசத்தில் இருந்தேன்
9. ஆழ்கடலிலே ஓர் இராப்பகல் முழுவதும் போக்கினேன்
10. அனேக தரம் பிரயானம் பண்ணினேன்
11. பிரயாணத்தின்போது ஆறுகளால் வந்த மோசங்களிலும்
12. கள்வர்களால் வந்த மோசங்களிலும்
13. என் சொந்த ஜனங்களால் வந்த மோசங்களிலும்
14. அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும்
15. பட்டணங்களில் உண்டான மோசங்களிலும்
16. வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும்
17. சமூகத்தில் உண்டான மோசங்களிலும்
18. கள்ள சகோதரர்களால் உண்டான மோசங்களிலும்
19. பிரயாசத்திலும் 20. வருத்தத்திலும்
21. அனேக முறை கண் விழிப்புகளிலும் 22. பசியாலும் 23. தாகத்திலும்

24. அனேக முறை உபவாசங்களிலும் 25. குளிரிலும்

26. நிர்வானத்திலும் இருந்தேன்

இவைகளை தவிர **எல்லா சபைகளைக் குறித்தும்** உண்டாயிருக்கிற **கவலை என்னை** நாள்தோரும் **நெருக்குகிறது என்கிறார்.** மேலே எழுதப்பட்டு **பவுல் அறிவித்த பாடுகள்** எதுவும் **மிகைப்படுத்தப்பட்டதல்ல** என்பதற்காக அவர் குறிப்பிடும் வார்த்தையதாவது.

என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட **தேவனும்** நம்முடைய கர்த்தராகிய இயேசு **கிருஸ்துவின்** பிதாவுமானவர் **நான் பொய் சொல்லுகிறவன் அல்ல** என்று அறிவார்.

27. **தமஸ்கு பட்டினத்தில்** அரேத்தர் இராஜாவின் சேனை தலைவனால் **நான் கொல்லப்படுவதிலிருந்து** தப்பிக்க ஒரு **கூடையில் என்னை உட்காரவைத்து** கயிறினால் கட்டப்பட்டு மதிலிலிருந்து ஜன்னல் வழியாக இறக்கிவிடப்பட்டு அவனுடைய கைக்கு தப்பினேன். ஊழியத்தில் **இப்படிப்பட்ட பிரச்சைகளை** சந்திக்க தன்னை தயார்படுத்தி கொண்டவர்கள் மட்டுமே செய்ய தகுதி பெற்றவராவார்.

அந்த தம்பி இதை வாசித்த உடன் ஜெபம் கூட செய்து கொள்ளாமல் எழுந்து போய்விட்டார். வாசகர்கள் பவுலுக்காக பாடுகள் அனுபவித்த மற்ற சீஷர்களுக்காக தேவனை ஸ்தோத்தரியுங்கள். ஜெபத்தோடு இந்த எடிட்டோரியலை முடிக்கிறேன் தொடர்ந்து உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

இந்த தம்பி மட்டுமல்ல மூன்றை வருடம் இயேசு கிறிஸ்துவோடு ஊழியத்தில்கூடவே இருந்த சிஷர்கள் இயேசுவிடம் குரு நாங்கள் எங்கள் குடும்பத்தைவிட்டு தொழிலை விட்டு உம்மோடு ஊழியம் செய்கிறோம். தொடர்ந்து ஊழியம் செய்தல் எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று கேள்வி கேட்டார்கள். பரிசுத்தாவியனவரை இயேசு இவர்ளுக்கு அளித்தபின் வெறும் கையால் ஊழியம் செய்து தையரியமாக சுவிசேஷம் அறிவித்து இரத்த சாட்சிகளாக மரித்தார்கள்.

இதை வாசிக்கும் வாசகர்களே! விசுவாசிகள் அல்லது ஊழியர்கள் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்போது பல பிரச்சனைகளை சந்திப்பார்கள். மகன் வெறுப்பான் மருமகள் பேரப்பிள்ளைகள் வெருப்பார்கள், மகள் அல்லது மருமகன் வெருக்கலாம், சொந்த சகோதரர்களே கூட நம்மை வெருக்கலாம், சோர்ந்து போகாதீர்கள். அவனவன் வீட்டாரே அவரவர்களுக்கு சத்துருக்கள் என்று இயேசு கூறியிருக்கிறார். இயேசுவின் சொந்த சகோதரர்களே இயேசுவை வெறுத்தார்கள். **நாங்களும்** பல விதத்தில் **வெறுப்புகள்** பகைகளை அனுதினமும் சந்திக்கிறோம். கர்த்தர், தான் **சகித்ததை** போல நாங்களும் அவைகளை சகித்து எங்களுக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது என்று பலர் முறுமுறுப்பதைப்போல் நாங்கள் முறுமுறுக்காமல் கிறிஸ்தவர்களுக்குள் உறவினர் அல்லது குடும்பத்தினர் யாரும் தராத சமாதானத்தை இயேசு ஒவ்வொரு நிமிடமும் எங்களுக்கு தருகிறார்.


கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென். **- - Dr. புஷ்பராஜ்**

# பிஷப் யோகன்னான்

## கார் விபத்தில் மரித்தார்

பிலிவர்ஸ் சர்ச் , ஆத்மீக யாத்திரை ரேடியோ நிகழ்ச்சி, பிலிவர்ஸ் சர்ச் மெடிக்கல் காலேஜ், பிலிவர்ஸ் சர்ச் வேதாகம கல்லூரி, இந்தியா முழுவதும் ஸ்தாபிக்கப்பட்ட பிலிவர்ஸ் சர்ச் சுமார் 6000 ஆலயங்களின் ஸ்தாபகருமான பிஷப் **K.P. யோகன்னான்** அவர்கள் அமெரிக்காவில் தன் ஸ்தாபன காம்பவுண்டை விட்டு வெளியே ரோட்டில் காலை நடைபயிற்சி செய்து கொண்டிருக்கும் போது சாலையில் சென்ற கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளானார்.

பிஷப் அவர்களின் உடல் விமானத்தில் கேரள மாநிலத்தில் உள்ள திருவல்லா என்ற ஊரில் அடக்கம் செய்யப்பட்டது.



Bro. K.P. Yogannan


அன்னாரை குறித்து முழு சரித்திரத்தையும் ஏற்கனவே ஜாமக்காரனில் வெளியிட்டிருந்தேன்.

**Bro K.P.** யோகன்னான் என்று அழைக்கப்படும்போதும் அதேன்பின் பாஸ்டர் **K.P.** யோகன்னான் என்று அழைக்கப்பட்ட காலங்ளில் அவர் செய்த ஊழியங்கள், பிரசங்கங்கள் யாவும் புகழப்படதக்கவைகளாகும். இவர் பிரசங்கம் மூலம் மதுபான குடியை நிறுத்தியவர்கள் எண்ணிக்கை ஏராளம். மனம் திரும்பிய மக்களின் எண்ணிக்கை ஏராளம். இவரால் உருவாக்கப்பட்ட ஊழியர்கள் உலகெங்கும் பிரபலமாகி சிறப்பான ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அற்புதமான, மிக எளிமையான ஊழியராக அறியப்பட்டார்.


ஆனால் திடீரென்று **பிஷப் ஆகும் ஆசையும் பிஷப்** ஆக வேண்டிய கட்டாயத்துக் குள்ளும் **K.P.**யோகன்னான் அவர்கள் தள்ளப்பட்டார்.

ஜெர்மனி தேச பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டபின் பல கோடி சொத்துக்களுக்கு அதிபதி ஆனார்.



Pastor K.P. Yogannan

கேரளாவிலே இந்து பெண் சந்யாசினிக்கு அடுத்தபடியாக மிக அதிகமாக வெளிநாட்டு பணம் பெறும் நபராக மாறினார். அதன் காரணமாக வருமான வரிக்கு காட்டமுடியாத கோடிக்கணக்கான பணத்தை ஒரு பழைய அம்பாஸிடர் காரில் கட்டுக்கட்டாக அடுக்கி வைக்கப்பட்டு வருமான வரி அதிகாரிகளால் கையும் களவுமாக பிடிபட்டார்.



Bishop K.P. Yogannan

தான் **பிஷப் ஆக வேண்டும்** என்பதற்காக **பல கோடிகள் லஞ்சமாக** (சுமார் **18 கோடி ரூபாய்கள்)** நான்கு பிஷப்மார்களுக்கு கொடுத்து திருவெல்லாவுக்கு அவர்களை நேரில் வரவழைத்து அன்றைய C.S.I. மாடரேட்டர் **Most Rev. K.J. சாமுவேல்** அவர்கள் முன்னிலையில் பிஷப்பாக முறைப்படியும் சட்டப்படியும் -- பிஷப்பாக **கான்சிகிரேட்** செய்யப்பட்டார். கோட்டயத்தில் சுமார் 17 கோடி சதுர அடி நிலத்தையும் ரப்பர் தோட்டத்தையும் விலைக்கு வாங்கினார். கேரள ஆளும் கட்சி, எதிர்கட்சி தலைவர்களுக்கும் மற்ற MLAக்களுக்கும் கோடி கணக்கில் லஞ்சம் கொடுத்து அத்தனை பெரிய நிலங்களை விலைக்கு வாங்கினார்.

திடீர் என **உபதேச மாற்றத்தில்** தன்னை மாற்றிக்கொண்டு **பெந்தேகோஸ்தே** உபதேசத்திலிருந்து கத்தோலிக்க உபதேசம் போன்ற **அர்த்தடாக்கஸ்** சபையின் **பிஷப்பாக**

மாறி, தன் சபைகளையும் அந்த உபதேசத்துக்கு மாற கட்டளையிட்டார். இதனால் ஆயிரக்கணக்கில் இவர் சபைகள் உடைந்தது. உடைந்த சபைகள் மற்ற சபைகனின் மக்கள் பாஸ்டர்கள் யாவரும் சேர்ந்தார்கள்.

இந்த நிலையில் CBI விசாரனை நடைபெற்றது. ஏராளமான பேங்கில் உள்ள இவரின் கோடி கணக்கில் பணம் முடக்கப்பட்டது. இவரின் **பாஸ்போர்ட்** பிடுங்கப்பட்டது. எப்படியோ மறுபடியும் பாஸ்போர்ட் வாங்கி அமெரிக்கா செனறார்.

### இந்த முறை அவர் கார் விபத்தில் அகப்பட்டார்.

பிஷப் K.P. யோகன்னானுக்கு ஒரு மனைவி, இரண்டு ஆண் மக்கள் உண்டு. பிள்ளைகள் இருவரும் மெடிக்கல் காலேஜ், வேதாகம கல்லூரி மற்றும் உள்ள ஏராளமான கல்லூரிகளையும், அவர் சொத்துக்களையும் தன் தாயுடன் இணைந்து நிர்வாகம் செய்கிறார்கள்.

**Bro. K.P. யோகன்னான்,** பாஸ்டர் **யோகன்னான்** என்ற பெயரில் **அவர் ஆரம்ப காலத்தில்** செய்த **அற்புத ஊழியங்களுக்காக** நான் தேவனை துதிக்கிறேன். ஆனால் **பிஷப்பாக மாரியபின் செய்த** ஊழியங்களுக்காக **நான் வருதப்படுகிறேன்.** பிஷப் அவர்களின் மரணத்தால் துக்கத்திலிருக்கும் மனைவி பிள்ளைகள் உடன் ஊழியர்கள், ஸ்தாபனங்களில் பணியாற்றும் யாவருக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களை அறிவிக்கிறேன்.

பிலிவர்ஸ் சர்ச் **மெடிக்கல் காலேஜ்** & **ஆஸ்பத்திரி** மிக சிறப்பாக நடப்பதாக கேள்விப்பட்டேன். அதற்காக தேவனை துதிக்கிறேன்.

**ONLINE BANKING (NEFT)**
**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**
IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)
IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# ஜெர்மனி தேசத்தில்...

# திருமதி நகுலா என்ற ஜாமக்காரன் வாசகர் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



நான் ஜெர்மனி தேசத்தில் பலமுறை ஊழியத்துக்கு சென்று வந்தேன். அப்போது என் கூட்டத்தில் அறிமுகமானவர்தான் **நகுலா** என்ற சகோதரி. பரம்பரை **மனநோயால்** பாதிக்கபட்டவர். அங்கு மனநோய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு ஓரளவு சுகமானார்.

இவருக்கு கணவர், மூன்று பெண் பிள்ளைகள் ஒரே ஒரு ஆன் மகன், அதில் வேதனை என்னவென்றால் இவரின் நான்கு பிள்ளைகளும் **மனநோயால்** பாதிக்கப்பட்டவர்கள் ஆகும். ஜெர்மனி அரசாங்கம் அந்த பிள்ளைகளை **நன்றாகவும் இலவசமாக வைத்தியம் செய்தும்** உணவு கொடுத்து காப்பாற்றுகிறார்கள்.

அந்த ஜெர்மனி தேச அரசாங்கத்துக்காக நான் தேவனை துதிக்கிறேன். இந்தியாவிலோ, இலங்கையிலோ இவர்கள் வாழ்திருந்தால் இத்தனை லட்ச கணக்கான ரூபாய் **வைத்திய செலவுக்கும், பிள்ளைகள் பராமரிப்பிற்கும்** செலவழித்திருக்க முடியுமா?

சகோதரி **நகுலா** யாரோடும் பழகமாட்டார், கதைக்க மாட்டார், ஜெர்மனியில் **Mrs.நீலாலிங்கம்** என்ற சகோதரியோடும் **என்னோடும்தான்** தொலைபேசி வழியாக தேவ வசனங்களை பற்றிய சந்தேகங்களை அடிக்கடி கேட்பார். ஒரு நாளைக்கு சுமார் **நான்கு முறையாவது** ஜெர்மனியிலிருந்து என்னுடன் பேசுவார். பல முறை என்னை தொலை பேசியில் அழைப்பதால் எனக்கு எரிச்சல் உண்டாகும். என் மனைவி, **நகுலா நார்மல் மனுஷி**




**அல்லவே.** மனநோயாளிதானே. அதனால் அவர் அப்படி **அடிக்கடி அழைக்கிறார்,** தயவு செய்து **கோபப்படாமல்** அவருடன் பேசு என்பார். எனக்கும் அவரை நினைத்து பாவமாக இருக்கும். **கேட்டதையே திரும்ப திரும்ப கேட்கும்போது**தான் நான் **பொருமையை** இழந்து விடுகிறேன்.

அவர் மரிக்கும் முன் என்னிடம் கேட்ட கேள்வி **பரலோக இராஜ்யம் வேறா, பரலோகம் வேறா.** இதுதான் என்னுடன் பேசிய கடைசி வார்த்தை. ஆழமான விசுவாசிகள் கூட இந்த ஆழமான ஆவிக்குரிய சந்தேகம் கேட்கமாட்டார்கள். அவருக்கு விளக்கிக் கூறினேன். மறுடியும் என்னை தொலைபேசியில் அழைத்து டாக்டர் எனக்கு **மூச்சு வாங்குகிறது.** ஜெபித்துவிடுங்கள் என்றார். **மூக்கில்** எப்போதும் **ஆக்ஸிஜன் டியூப்போடுதான்** இருப்பார். நான் தொடர்ந்து ஜெபித்தேன். மரணத்தை நெருங்குகிறார்கள் என்பதை உணர்ந்த நான், அவரோடு கூறினேன். **நகுலா** இப்போதே உங்கள் **ஆத்துமாவுக்காக ஜெபியுங்கள்**. நீங்கள் **இரட்சிக்கப்பட்டுவிட்டீர்கள்** ஆகவே **மரண பயம்** உண்டாக கூடாது என்றேன். **நீலா சகோதரி** மூலம் நகுலாவின் மகன் வரவழைக்கபட்டு தன் தாய் அருகிலேயே அமர்ந்து நகுலா **கூறிய வேத வசனத்தை** வாசித்தார். அந்த மரண சமயத்தில்தான் **மகனும் இரட்சிக்கப்பட்டான்.** வேத வசனம் வாசிக்க வாசிக்க நகுலாவின் **உயிரும் பிரிந்தது.** நகுலாவின் மரணம் **நல்ல மரணம்.** அவர் ஆத்மா நிச்சயம் **கர்த்தரின் கைக்கு** போய் சேர்ந்திருக்கும். பிர. 12:7 என்று நம்பி துதிக்கலாம்.

**நகுலா** அடிக்கடி என் பாடலை கேட்டுக்கொண்டு இருப்பார். **சகோ. நீலா லிங்கம்** அவர்கள் **காலமோ செல்லுதே** என்ற என் பாடலை **டொச் பாஷையில்** எழுதிக்கொடுத்து அடக்க ஆராதனையில் இரண்டு வாலிப ஜெர்மன் பெண் பிள்ளைகளை பாட வைத்தார்கள். மிக அழகாக தமிழ் வார்த்தைகளை தெளிவாகவும் நன்கு உச்சரித்தும் **பாடினார்கள்.** சகோதரி நீலா அவர்கள் அந்த **வீடியோவை எனக்கு அனுப்பி வைத்தார்கள்.** கடைசி வரை **முறுமுறுக்காமல்** நகுலாவுடன் தொடர்பு கொண்டு **வசனங்களை கூறி** ஜெபிக்கும் **சகோதரி நீலா லிங்கம்** அவர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

என் ஜாமக்காரன் வாசகியாக பல ஆண்டுகள் விசுவாசத்தோடு வாழ்ந்த நகுலாவின் வாழ்க்கைக்காக தேவனை துதிக்கிறேன்.



# ஆவியானவர் விசுவாசிகளுக்கு அருளப்பட்டதின் நோக்கம்

Rev.Dr. **தியோடர் வில்லியம்ஸ்**

**ஜாமக்காரன் :** ஆவியானவர் அருளப்பட்டதின் **நோக்கம், அன்னியபாஷை** பேச அல்ல.. அப். 2ம் அதிகாரத்தில் ஆவியானவர் வரும்போது **பெலப்பட்டு – புறப்பட்டு – சாட்சியாக** இருக்க வேண்டும். என்பதே கர்த்தரின் நோக்கம்.

அப்போஸ்தலர் நடபடிகளின் மூலமாய் ஆவியானவர் எவ்விதமாய் அருட்பணியில் ஈடுபடுகிறார் என்றும், மிஷனரி ஊழியத்தை ஆண்டு நடத்துகிறவராகவும் அதில் பலரை ஈடுபடுத்துகிறவராயும், ஆவியானவர் நமக்கு **அப்போஸ்தலர்** நடபடிகளில் **வெளிப்படுகிறார்.** அப்போஸ்தலர் 1:8

பரிசுத்த ஆவியானவர் வருவதன் முக்கிய நோக்கம் சீஷர்கள் **பெலனடைய** வேண்டும். அவர்கள் மூலமாக கிறிஸ்துவை பற்றிய **சாட்சி பல இடங்களுக்கும் பரவ வேண்டும்** என்பதுதான். அருட்பணிக்கான ஒரு அழகான திட்டத்தை ஆண்டவர் சீஷர்களுக்குக் கொடுத்தார். முதலில் உங்கள் ஊழியத்தை **எருசலேமில்** முடித்துவிட்டுப் பின்பு யூதேயா முழுவதற்கும் போங்கள். அதற்குப்பின் **சமாரியாவிற்கும் பூமியின் கடைசி பரியந்தம்** ஒவ்வொரு இடமாக செல்லுங்கள் என்று அவர் கூறவில்லை. **ஒரே சமயத்தில் எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு நீங்கள் சாட்சிகளாக இருக்க வேண்டும்** என்று கூறினார். அது **பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் மட்டுமே சாத்தியம் ஆயிற்று.** அப்போஸ்தலர் நடபடிகளில் நூலில் ஆவியானவர் எவ்விதமாய்ப் பலரை பயன்படுத்தி அந்த திட்டத்தை நிறைவேற்றினார். என்று வாசிக்கலாம்.

எருசலேமில் **சீஷர்கள்ஆவியானவரால்** நிரப்பப்பட்டதை குறித்து அப்போஸ்தலர் 2:4ல் பார்க்கிறோம். மேலறையில் கூடியிருந்த நூற்றிருபது பேரும் (அதிலே அப்போஸ்தலர்களாக தெரிந்துகொள்ளப்பட்ட **பன்னிரண்டு பேரும்** உண்டு) பரிசுத்த ஆவியினாலே நிறப்பப்பட்டு ஆவியானவர் **தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே** வெவ்வேறு **பாஷைகளிலே** பேசத் தொடங்கினார்கள். **அப்படி வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினது அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள் என்பது அவர்களுக்குரிய அடையாளமாக அல்ல. அவர்களை காண்கிறவர்களும், கேட்கிறவர்களும் கடவுளைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக.**

அப்போஸ்தலர் 2:6,8,11ல் **தங்கள் சொந்த பாஷையிலே** கடவுளைப்பற்றி கேள்விப் பட்டதினாலே அவர்களில் **அநேகர் விசுவாசித்தார்கள்**. ஒருவேளை அந்த நாளில் விசுவாசிகளான யாவரும் **ரோமாபுரி மக்கள்** மூலமாக **ரோமாபுரியில் திருச்சபை** நிறுவப்பட்டிருக்கலாம் என்று வேத அறிஞர்கள் கருதுகிறார்கள். **உலகமெங்கும் திருச்சபை நிறுவப்படுவதற்கு அந்த பெந்தேகொஸ்தே நாளின் பரிசுத்த ஆவியானவரின் நிறைவின் அனுபவம் ஏதுவாயிற்று.**

எருசலேமில் திருச்சபையின் மக்கள் **திருப்தியோடு வாழ்ந்து** கொண்டிருந்த சமயத்தில் **உபத்திரத்தின் மூலமாக அந்த சபை சிதறடிக்கப்பட்டது.** உபத்திரவத்தின் மூலமாய் சிதறடிக்கப்பட்டவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் கிறிஸ்துவை பிரசங்கித்தார்கள். அவர்களில் **பிலிப்புவும்** ஒருவர். அவரை பரிசுத்த ஆவியானவர் அருட்பணியில் வழி நடத்தினதினால் **சமாரியா** பட்டணத்திற்கு போய் கிறிஸ்துவை குறித்து பிரசங்கித்தார். **சமாரியர்கள்** கிறிஸ்துவை **மேசியா** என்று விசுவாசித்து ஏற்றுக்கொண்டார்கள். இது அப்போஸ்தலர் 1:8ல் இது ஆண்டவர் கொடுத்த **வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல்** ஆகும். அப்போஸ்தலர் 8:26-29ல் **எத்தியோப்பியாவில்** இருந்த ராஜஸ்தீரியாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரி ஒருவன் எருசலேமுக்கு வந்து, யெகோவாவை ஆராதித்துவிட்டு, தன் ஊருக்கு திரும்பி போனான். **அவன் மூலமாய்** எத்தியோப்பிய நாட்டிற்கு **கிறிஸ்துவை** பற்றின நற்செய்தி சொல்ல வேண்டும். இவ்விதம் **ஆப்பிரிக்கா கண்டத்திற்கு** நற்செய்தி எடுத்து செல்ல வேண்டும் என்பதற்காகவே ஆவியானவர் **எத்தியோப்பிய மந்திரியை** சந்திக்க வேண்டி மாத்திரம் **பிலிப்பை** அனுப்பினார். உலகமெங்கும் கிறிஸ்துவின் நற்செய்தி சொல்ல வேண்டுமானால் **ஆவியானவரின் கிரியை மிக அவசியம்.**

அப்போஸ்தலர் 8:39ல் பிலிப்பு முழுவதுமாக **ஆவியானவரின் ஆளுகைக்கு கீழ்** இருந்தார். **பரிசுத்தாவியானவர் ஆளுகையின்கீழ்** ஒரு மனிதன் இருக்கும்பொழுது அவருடைய அருட்பணியில் **அவனை அவர் பயன்படுத்துகிறார்.** நம் வாழ்க்கையின் மூலமாய் **கிறிஸ்துவின் நற்செய்தியை கேட்டிராத மக்கள்** நம் நாட்டிலும் மற்ற நாடுகளிகலும் சந்திக்கப்படவேண்டுமானால் அவருடைய **ஆளுகைக்கும் வழிநடத்து தலுக்கும்** நம்மை நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும். **அவர் நம்மை எங்கெல்லாம் அழைத்து செல்கிறாரோ அங்கெல்லாம் செல்லுவதற்கு ஆயத்தமாய் இருக்க வேண்டும்.**

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி அநேக இடங்களுக்கு செல்லாமல் இருப்பதற்கு காரணம் **விசுவாசிகள் கீழ்படிதலும் தரிசனமும் இல்லாதவர்களாய்** இருப்பதுதான்.

புற ஜாதியாருக்கு நற்செய்தி சென்றிடாத அந்த ஆரம்ப காலங்களில் புற ஜாதிகளுக்கு முதன் முதலாக நற்செய்தி எடுத்துச் செல்லும்படியாக **பேதுருவை** ஆவியானவர் பயன்படுத்தினார். புற ஜாதியாருக்கும் யூதருக்கும் நடுவில் உள்ள **தடுப்பு சுவரை** பெரியதாக்கி யூதருக்கு நற்செய்தி செல்லாதபடிக்கு பேதுரு **தடுத்துவிடக்கூடாது** என்று அவரையே **பக்குவப்படுத்தி** அவரோடு **ஆவியானவர்** தனிப்பட்ட முறையில் பேசினார். அப்போஸ்தலர்10:19,20

**அந்தியோகியா சபை** அருட்பணியில் ஈடுபடும்படியாகவும் **பர்னபாவையும் பவுலையும்** அவர்கள் **மிஷனிரிகளாக** அனுப்பும்படியாகவும், **ஆவியானவர் அந்த சபையை வழி நடத்தினார்.** அப்போஸ்தலர் 13:4ல் **அவர்கள் பரிசுத்த ஆவியினாலே அனுப்பப்பட்டார்கள்.** ஆகவே சபையும் அவர்களை **மிஷனரிகளாக** அனுப்பிற்று. என்ன அறுமையான பொறுத்தம் பவுலும் பர்னபாவும் நற்செய்தி சென்றிடாத இடங்களுக்கு நற்செய்தி எடுத்துக்கொண்டு **ஆதித் திருச்சபையின் மூலம் மிஷனரிகளாக சென்றனர்.** ஆசியா முழுவதற்கும் நற்செய்தி எடுத்துச் செல்லவேண்டும் என்று பவுல் திட்டமிட்டுக் கொண்டிருக்கும்பொழுது **ஆசியாவில் உள்ள கதவுகளை அடைத்து** அவரை ஐரோப்பியா கண்டத்திற்கு அனுப்பினார். அப்போஸ்தலர் 16:6,7

அருட்பணியின் ஊழியத்தின் **பாரம், தரிசனம், திட்டம்** எல்லாம் **ஆவியானவருடையது.** அவர் **சபையை** நடத்துகிறார், **தனி மனிதனை** நடத்துகிறார். நாம் நம்மை அவரின் ஆளுகைக்கு **ஒப்புக்கொடுக்கும் பொழுது** அவரின் அருட்பணியின் **பாரத்தை** நமக்குள் கொடுத்து அதில் நம்மை ஈடுபடுத்துகிறார்.

# LEF லேமேன்
# இவான்ஜிலிக்கல் பெல்லோஷிப்

**குறிப்பு:** அனேக ஆண்டுகளுக்கு முன் ஜாமக்காரனில் நல்ல ஆவிக்குரிய சபை என்று LEF சபையை குறித்து நான் புகழ்ந்து எழுதியிருந்தேன். அதன்பின் LEF சபையை சார்ந்த பல பெற்றோர் மூலம் நான் அப்படி எழுதியதில் முழு பாகமும் சரியில்லை என்று பக்கம் பக்கமாக LEF சபை அங்கங்கங்களே எனக்கு எழுதினார்கள். மேலும் LEF நிர்வாகத்தை குறித்தும் நடத்துபவர்களைக் குறித்தும் கடிதங்கள் எழுதி அவர்களின் **சொத்து விவரம்** முதல்கொண்டு **ஆதாரத்தோடு** எனக்கு எழுதினார்கள். அதன்பின் LEFஐ குறித்து என் அபிப்ராயத்தை மாற்றிக்கொண்டேன். கீழே நீங்கள் வாசிப்பது என்றைக்கோ LEF சபையில் உள்ள முக்கியமானவர்களால் சமீபத்தில் எனக்கு எழுதி அனுப்பப்பட்டது. இதை வாசித்து நலமானதை பற்றிக்கொள்ளுங்கள்.

ஐயா,

தாங்கள் ஜாமக்காரனில் எழுதியது முழுவதும் சரியில்லை. **இலேமேன்ஸ் இவான்ஜிலிக்கல் பெல்லோஷிப்,** (LEF) இது **ஒரு குடும்பம்** அதாவது **ஒரே ஒரு குடும்பம்.** அதின் பெயர் **தானியேல் குடும்பம் எனபதாகும்.** மேலும் அதின் சிறப்பு என்னவென்றால் அதை கடவுளின் பிள்ளைகளின் குடும்பம் (ஹரிஜன்) என்று அழைத்துக்கொள்வார்கள். (அப்படியானால் மற்றவர்கள் யார் பிள்ளைகள்) இவர்கள சபையில் காணிக்கை பணம் திருடி சேர்த்து எந்தவித **கணக்கு இல்லாமல்** பணத்தை வீன் விரயமாக செலவு செய்வதை ஒரே குறிக்கோளாக கொண்ட குடும்பம்.

**பணம் கொடுத்தால்** இலேமேன்ஸ் இவான்ஜிலிகல் பெல்லாஷிப்பில் **எல்லாம் வேகமாக நடக்கும்.** நன்றாக படித்து **பெரிய வேலையில்** இருக்கும் பையன்களுக்கு அல்லது அழகிய **பெண்களுக்குத்** திருமணம் வெகு சீக்கிரம் அவர்கள் நடத்தி வைப்பார்கள். மற்றவர்களுக்கு 42 வயது ஆகியும் காத்திருக்கவேண்டும். வசனம் கூறவில்லை என்ற பதிலை கூறிவிடுவார்கள்.

உங்களுக்கு கடவுளின் ஊழியத்தில் பங்கேற்க ஒரு தருணம் தருகின்றோம் என்று சொல்லி **காணிக்கை எடுத்து** அதை ஊழியம் செய்யும் உண்மையான ஊழியர்களுக்கு பைசாகூட கொடுக்காமல் **தன் குடும்பத்திற்கே அந்த பணத்தை எடுத்துக்கொள்ளும்** கொடுமையை என்ன சொல்வது.

**தாத்தா** அப்பா **மகன்**(கள்) **பேத்திகள்** பேரன்கள் அவர்களுக்காகவே இருக்கின்றது இலேமேன்ஸ் இவான்ஜிலிக்கல் பெல்லோஷிப். ஒரு ஊழியனுக்கும் ஒரு பைசா

கொடுக்கமாட்டார்கள். எங்களைப் பார் கடவுள் எங்களை அபரிமிதமாக ஆசீர்வதிக்கவில்லையா? எங்கள் விசுவாசத்திற்கான அளவின்படி யே எங்களை ஆசீர்வதித்தார்.

உங்களுக்கு விசுவாசம் இல்லை, அதனால் கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கவில்லை. நீங்கள் **எங்களைப் பார்க்காதே** கடவுளைப் பார். **மனுஷனை பார்க்காதே.** நாங்கள் (ஜோ & லில்லி குடும்பம்) ஒருபோதும் ஒரு ஆளை பார்த்து **ஒரு பைசாகூட கேட்டது இல்லை.** என்று **உறுக்கமாக** பேசுவார்கள். ஆனால் **கேட்காமலே எல்ல பணத்தையும்** எடுத்து உபயோகிப் பார்கள். எப்போதும் அடிக்கடி **விமான பயனம்தான்**, நட்சத்திர **ஹோட்டல்**தான் என்று ஒரு வேலையும் செய்யாத அவர்கள் **சுகமான வாழ்க்கை** வாழ்கிறார்கள். .

சகோ லில்லி கூறுவதாவது : என் கணவர் சகோதரன் **ஜோ** ஒரு பைசாகூட நான் **சம்பளமாக** பெற்றேன் என்று **ஒரு மாதமும் கொண்டு வந்ததேயில்லை**. **விசுவாசத்தினால்** நாங்கள் வாழ்ந்தோம் என்று **லில்லி அம்மையார்** சொல்லி அது **மாத பத்திரிகையிலும்** வெளிவந்தது. ஆனால் உண்மையில் **கோவை, மேட்டுப்பாளையம், காரமடை, ஊட்டி** போன்ற இடங்களில் உள்ள சபைகளில் **திங்களன்று ஆள் அனுப்பிக்** காணிக்கையை வாங்கி வரச்செய்தது உண்மையா இல்லையா என்று கூற சொல்லுங்கள். இவர்கள் ஏன் பொய் சொல்ல வேண்டும்?

**காணிக்கை** பணத்தை வாரம் ஒரு முறையாவது **வங்கியில்** போடாமலே ப**ணமாகவே சொந்த காரியத்துக்கு** உபயோகித்து வந்தது இல்லையா, ஒரு நாளாவது **வந்த பணத்துக்கு ரசீது** கொடுத்தது உண்டா?. பள்ளி **ஆசிரியர்களுக்கு** சம்பளம் **மிக குறைந்த அளவே** கொடுத்து விசுவாசத்தினாலே **தியாகம் செய்யுங்கள்** என்று சொல்லிக்கொண்டே பள்ளிகள் மேலாளர்கள் இடம் **2 லட்சம் அனுப்பு** என்று சொன்னதில்லையா? ஆசிரியைகளுக்கு சம்பளம் கூட்டிக்கொடுத்தால் இன்னும் உற்சாகமாக வேலை செய்வார்களே! அவர்களுக்கும் குடும்பம் உண்டே ! மனசாட்சியே இல்லாதவர்கள்.

எல்லாத்துக்கும் மேலே ஒரு செய்தி. இப்ப இலேமேன்ஸ் இவான்ஜிலிக்கல் பெல்லோஷிப் அப்படினு **அரசாங்க பதிவு கிடையாது.** ஆகையினாலே எல்லா பணமும் இவுங்க கைக்கு போய்விடும். தங்கள் பிள்ளைகளை **கடவுள் சொன்னார்** அப்படின்னு எந்த வேலையும் செய்யாமல் **வீட்டிலேயே தங்க வைச்சு** திருடி சேர்த்த பணத்தை பாதுகாக்க நல்ல திட்டம் தீட்டி செயல்படுத்துவாங்க. அதே நேரம் சபை ஜனங்களுக்கு தம்பி தங்கச்சி தம்புடா அப்பா அம்மாவை விட்டு, ஆண்டவருக்காக வீட்டை விட்டு நாங்க சொல்றபடி செய்யுன்னு ஆலோசனை கொடுப்பாங்க. ஆனாலும் சபையில் குடும்பத்தின் முதன்மரியாதை அவர் பிள்ளைகள் சகோ லில்லி குடும்பத்துக்குதான் வயதானாலும் இன்னமும் **ரிட்ரிற்றில்** மேடை ஏறி இவர்கள் பாடுவார்கள். மற்றவர்களை பாட அனுமதிக்கமாட்டார்கள் ஜான் ஐயாவின் மனைவி மட்டுமே **பியானோ போட முடியும்** வேறு யார் போட்டாலும் அனுமதிக்க மாட்டார்கள். வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால் அம்யைாருக்கு பியானோ இசை வாசிக்கத் தெரியாது பியானோவின் வெரும் சத்தம் தான் வரும்.

இப்பொழுது **ஜான் ஐயா மகளும்** மோசமாக வாசிக்கிறது. இதெல்லாம் எதற்காக என்றால் அவர்கள் சென்னை வந்து போக **விமான செலவு போக** பணமாக விமான சேவைக்கு கொடுக்கப்படுகிறது.

**தானியேல்** ஐயா இரண்டாவது மகன் **பிரான்சிஸ்** மகன்களுக்கு **இரண்டாவது இடம்** அவர்கள் **பெங்களூரில்** உள்ள LEF சபையில் வேண்டிய **பணத்தை** சுருட்டிக் கொள்ளலாம்? ஆனால் மேடை ஏறி பிரசங்கிக்க கூடாது. இசை கருவி வாசிக்கலாம் அவ்வளவே. ஏன் என்றால் உன் சந்ததியின்மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் என்று கர்த்தர் சொன்னார் என்பார்கள். அது சரிதான் அப்படி என்றால் உங்கள் குடும்பத்திலேயே ஏன் இவ்வளவு வேறுபாடு, ஏன் இவ்வளவு வெறுப்பு.

வயது முதிர்ந்த முனைவர் **விட்சன் பால்** அவர்களையும் **வயதாலும்** உடல் **உபாதையாலும்** மிகவும் சிரமப்படுகின்ற திருமதி **கமலா பால்** அவர்களையும், இந்த இரண்டு முதியோரை **வீட்டைவிட்டு தெருவுக்கு** பணம் ஏதும் இல்லாமல் நிர்கதியாக துரத்தியது எந்த விதத்தில் சரி, துரத்திய வக்கிரத்தை உன்மத்தை என்ன சொல்வது.

**சகோதரன் ஜான்** அவர்களே முனைவர் **விட்சன் பால்** உங்கள் திருமணத்தை நடத்தி வைத்தவர். பெரிய **பிலா தோட்டங்களில்** அவர் கடைசி **வாழ்கையை** சமாதானத்துடன் கழிக்க ஒரு அறையை கூட கொடுக்கவில்லை. அவர் கடைசி காலத்தில் வாழ ஒரு மூலை கூட கிடையாதா. இவர் சகோ, **ஜோவைவிட** அவரின் மகனைவிட **மிக நன்றாக பிரசங்கிப்பவர்.** இவர் ஒருவர்தான் **வேதாகம கல்லூரியில்** பட்ட படிப்பு படித்தவர் ஆவார்.

சேலம் LEF பொருப்பாளர் **சகோ. ஞானசேகரன்** தான் சகோ. **விட்சன் பால்** அவர்களை தங்கள் பெற்றோறைபோல மரணம் வரை காத்து பராமரித்தார்கள். சகோ. ஞானசேகரனுக்காக தேவனை துதிக்கிறேன்.

**மூத்த உண்மையான** உத்தமுமான **ஊழியக்காரர்களுக்கு** ஓய்வூதியம் தரமாட்டார்கள். பிள்ளைகளும் கண்டுகொள்ள மாட்டார்கள், **ஒரு வேளை உணவுக்காக** பிறரை அண்ட வேண்டிஇருக்கும். ஆனால் **லில்லி அம்மாளுக்கு** உதவி செய்ய **ஆறு முதல் எட்டு குடும்பங்கள்** சம்பளமில்லாமல் உதவி செய்ய வேண்டும். **லில்லி அம்மாள்** பிள்ளைகள் பணம் பிடுங்குவதை தவிர வேறு எதுவும் செய்ய மாட்டார்கள்.

சகோதரன் ஜோ முதலை தீவில் ஏமாந்த பணத்தின் அளவு என்ன, எதற்காக பொய் சொல்லி, ஊழியம் பண்ண போவதாகச் சொல்லி தனியார் வங்கி அதிகாரியை சந்தித்து மிரட்டப்பட்டு, ஏமாந்து வந்தது ஏன்?

**ஜான் தானியேல்** வேதாகம கல்லூரியில் படித்தவர் அல்ல. **பொறியியல்** அதுவும் ஒரு தனியார் கல்லூரியில் படித்தார். இப்பொழுது தனியார் நிறுவன்ததில் வேலை பார்க்கிறார்.

அலுவலகத்திற்கு தெரிவிக்காமல் இவர் **தலைமை பொறுப்பபை** ஏற்று கொண்டிருக்கிறார். அவர் இதை செய்வது **இந்திய சட்டப்படி** முற்றிலும் தவறு அவர் ஒரு **அமெரிக்க குடி மகன்**, **சட்டத்தை மதிக்காமல்** ஏமாற்றி கொண்டு ஊழியம் செய்வதாக கதை விட்டுக்கொண்டிருக்கிறார். அப்படி செய்வது சட்டப்படி குற்றம். அவரும் அவர் குடுப்பமும் வருடந்தோறும் **சுற்றுலா பயணிகள்** என்று பொய்யை கூறி **விசா** எடுத்து **இந்தியாவிற்குள் வருவதற்கு** அனுமதி பெற்று வருகின்றனர். அப்படி **பொய் சொல்லுபவன்** ஊழியம் ஏன் செய்ய வேண்டும். சகோ. பால் அவர்கள் வேதாகம கல்லூரியில் படித்து மிக நன்றாக **பைபிள் ஸ்டடி** நடத்துபவர். சபை மக்கள் அவர் பிரசங்கத்தை விரும்புகிறார்கள் என்று அறிந்ததும், **ஆட்களே இல்லாத** ஆந்திர கிராமத்துக்கு வெரும் **500 ரூபாய்** சம்பளம் கொடுத்து அனுப்பினார்கள். இப்படிப்பட்டவர்கள் கடவுளின் பிள்ளைகள்.

**பணத்தை ஹவாலா** முறையில் வெளி நாடுகளுக்கு அனுப்பினதாகவும் அவர்மேலும் **தேவன் நம்மோடிருக்கிறார்** என்ற பெயர் உடைய (இம்மானுவேல்) நபர் மேலும் சந்தேகம் உண்டு. மேலும் தேவன் நம்மோடிருக்கிறார் என்ற பெயர் உடைய நபர் **பெண் பித்து** பிடித்த நபர். முழு முட்டாளாக தன் கீழ் பணியாற்றும் பெண்ணை கூட்டி சென்றார். ஆனால் அவ்வூரில் ஒரு கார் வந்தாலே எல்லாரும் கவனிப்பார்கள். தேவன் நம்மோடிருக்கிறார் என்ற பெயர் உடைய அந்த நபர் பல திறமைகள் உள்ளவர். ஆனால் ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்றபடி **அந்த பெண்ணுக்கு போதும்** என்று எண்ணம் வந்தது. அந்த பெண்ணும் அந்த நபரை வெறுத்தது. அது இயற்கையே. அந்த **பெண், போலீஸில்** புகார் செய்வதாக கூறினார். ஆனால் தம்பி போலீஸ் ஸ்டேஷனில் துள்ளி குதித்தார். **நான் யார் தெரியுமா ?** என்று **போலீஸ் ஸ்டேஷனில்** மிரட்டினார். இன்ஸ்பெக்டர் அசரவில்லை. அவர் தினந்தோறும் டஜன் கணக்கில் அப்படிப்பட்ட பிராடுகளை பார்த்தவர். நாலு வார்த்தைகள் வீசினார். ஏல, **பெண்டு நிமிர்திருவேன் மொபைல் போனை** கொடுல அப்படினார். **மொபைல் போனை** பார்த்த உடனே சாயம் கரைஞ்சுது. **ஓடுல இனி ஒழுங்கா இரு**, சும்மா பிரசங்கம் பண்ணிக்கிட்டு **திரியாதே என்று அதட்டினார்.**

மேலும் தேவன் நம்மோடிருக்கிறார் என்ற பெயர் உடைய நபர் **கணக்குப்பிள்ளை** வேலை பார்த்துக்கொண்டிருந்தார், உடனே **பெல்லோஷிப் பணம்** 4 லட்சம் எடுத்தது தன்னுடைய நிநேகிதி மூலமா **லில்லி அம்மாளுக்கு** கொடுத்தார். **லில்லி அம்மாளுக்கு** பணம் கிடைத்தவுடனே ஆனந்தம் **இவ்வளவு பணம்** அந்த அன்றாடம் காய்ச்சிக்கிட்ட எப்படி இவ்வளவு பணம் வந்தததுன்னு சகோ. லில்லி யோசிக்க இல்லையே, முதலாளிக்கு **வேலைக்காரன் பண உதவி செய்தது போலாயிற்று**. உடனே லில்லியிடம் அந்த பணத்தை வாங்கி வச்சி கிட்டாங்க. போலீஸிக்கு போன் போட்டு சொன்னவுடனே தம்பி **அப்படியே மன்னிப்பு கேட்டுக்கிட்டாரு.** இப்பவும் அவருதான் **புறவாசல்** வழியா வந்து **அம்மையாருக்கு ஆலோசனை** கொடுக்குறாரு. இந்த குறிப்பிட்ட விஷயம் சபையில் ஒரு சிலருக்குதான் தெரியும்.

LEF சபைகளின் **சொத்து யார் பெயரில்** இருக்கிறது **எவ்வளவு**,! என்று யாருக்கும்

தெரியாது. பணத்தைப்பற்றி யாருக்கும் எந்த பொறுப்பும் கிடையாது. வர துட்டை கொடுத்து விட்டுபோ என்பதே LEFயின் சட்டம். இதை எல்லாம் கண்டும் பேசாமல் இருந்தா, பிரசங்கம் செய்ய தெரியாமல் இருந்தாலும், ஊழியம் செய்ய அனுப்புவார்கள். வருட **காலண்டர் பிரிண்ட்** அடிப்பார்கள். அதில் **யார் யாருக்கு,** பங்கு யாருக்கும் தெரியாது. ஆனால் கடவுள் பார்த்துகிட்டு இருக்கிறார். கொள்ளை அடித்த **முன்னாள் மாடரேட்டர்** இப்பொழுது கம்பி எண்ணி களி தின்றுகொன்று இருக்கிறார். **தற்பொதைய மாடரேட்டர்** ஆஸ்பத்திரியில் இருக்கிறார். **அந்த சபைகளைபோல LEFலும் நடக்கப்போகிறது.** நாங்கள் LEF விசுவாசிகள் **சிலராக கேட்டுக்கொள்வதாவது**. இதை வாசிக்கும் LEF சபை விசுவாசிகள் ஒருகாரியத்தை செய்யுங்கள், **தசம பாகம்** ஸ்தோத்திர காணிக்கை என்று **இவர்களிடம் கொடுக்காதீர்கள்.** ஒரு ரூபா காணிக்கை மட்டும் போடுங்கள்.

இரட்சிக்கப்படாதவர்களிடத்திலிலிருந்து விலகியிரு. அவர்களோடு கலவாதே, அது மனைவியாக இருந்தாலும் மகளாக இருந்தாலும் பெற்றவராக இருந்தாலும் தயவு தாட்சன்யம் பாராமல் அவர்களைவிட்டு ஒதுங்கி இருங்கள். இப்படிப்பட்ட தங்கள் **தவறான பிரசங்கம்** மூலம் குடும்பத்தையே **இவர்கள் பிரித்துவிடுவார்கள்.** அப்படி பிரிக்கபட்ட குடும்பம் எத்தனை தமிழ்நாட்டில் மட்டும் வாழ்கிறார்கள் என்பது எங்களுக்கு தெரியும்.

LEF சபைகளை சகோதரி **லில்லி** அவர்கள் கையிலிருந்து வாங்கி **பல வருட அனுபவம் பெற்ற உண்மையுள்ள** LEF **ஊழியர்களிடம்** கொடுத்தால் அவர்கள் குழுவாக இணைந்து LEF நிர்வாகத்தை சட்டப்படி உண்மையாக நடத்த முடியும். இவர்கள் சட்டப்படி **சபை நடத்தும் ஊழியர்கள்** தங்கள் சபையில் வரும் **காணிக்கைளை** தலைமை சபைக்கு அனுப்பிவிட வேண்டும் அப்படி அனுப்பிவிட்டால் **ஊழியர் குடும்ப செலவுக்கு என்ன செய்வார்கள்?** சபை கட்டிடத்தை **பராமரிக்க,** மற்ற **மின்சாரம் தண்ணீர்** போன்ற செலவுகளுக்கு என்ன செய்வார்கள்.? ஆனால் பல வருடமாக இந்த LEFல் சட்டம் அமலில் இருக்கிறது.

இது தொடர்ந்தால் மற்ற **மெயின் லைன்** சபைகளை போல் சபையை நடத்தும் ஊழியர் காணிக்கையில் தான் கை வைப்பார்கள். இதன் முலம் LEF தலைமை LEF சபையின் உண்மை ஊழியர்களை **பொய் சொல்ல** கட்டாயப்படுத்துகிறது.

**ஜாமக்காரன் :** LEF சபையில் உள்ள விசுவாசிகள் தங்கள் பிள்ளைகள் திருமணத்தில் **வசனம் சொல்கிறதா** என்று கேட்கும் LEFன் சபை **சட்டங்களுக்கு** கீழ்படிந்திருந்தால் பிள்ளைகளின் திருமணம் நடக்காமல் உங்கள் பிள்ளைகள் **வாழவெட்டியாகத்தான்** இருப்பார்கள். இப்படிப்பட்ட பெண்கள் ஊழியம் செய்கிறேன் என்று கூறி பொய்யான **வாழ்கை** வாழுவார்கள். உங்கள் பிள்ளைகளின் திருமணத்தை LEF ஊழியர்கள் அல்லது மூப்பர்கள் பொறுப்பில் விட்டால், படிப்பிலும் அழகிலும் பொருத்த மில்லாதவர்களைதான் திருமணம் செய்ய நேரும். பையன் **பெண்** இவர்கள் சம்மதம் இல்லாமல் **பழைமைவாதி** பெற்றோர்கள் **ஜோ அவர்களை தெய்வம்போல்** மதிக்கும் அவர்கள் **ஜோவின்** தவறான உபதேசத்துக்கு பயந்து பிள்ளைகளை கிணற்றில் தள்ளிவிடுகிறதைபோல் தள்ளிவிடுவார்கள் ஜாக்கிறதை !!

# கேரளா கன்வென்ஷன்







கேரளா மாநிலத்தில் **குங்கம்குளம்** என்ற இடத்தில் அனைத்து சபை விசுவாசிகளையும் சேர்த்து **Penial Mission of India** என்ற குழுவினர் ஐக்கிய கன்வென்ஷன் நடத்தினார்கள்.

40 ஆண்டுகளுக்கு முன் பல முறை இந்த ஊரில் கூட்டங்களில் பிரசங்கம் செய்துள்ளேன். திருநெல்வேலியில் **நாசரேத்** என்ற ஊரில் பெரும்பாலானவர்கள் கிறிஸ்தவர்களாக வாழ்கிறார்கள். அதைப்போல் குங்கம்குளம் என்ற ஊரில் பெரும்பாலும் அனைத்து மக்களும் கிறிஸ்தவர்களாக இருப்பார்கள். நான் பிரசங்கிக்கும் மைதானத்தில் 20 முதல் 40 ஆயிரம் மக்கள் திரளாக கூடுவார்கள். இந்த ஊர் சபை விசுவாசிகள் பலருக்கு என்னை மிகவும் பிடிக்கும். சுமார் 7 முறை தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் என்னை பிரசங்கத்துக்கு அழைப்பார்கள். இந்த ஊர் கன்வென்ஷனில் 1978ம் வருடம் மொழிபெயர்ப்பாளர் இல்லாமல் நானே மலையாளத்தில் பிரசங்கம் செய்ய கர்த்தர் அருள் புரிந்தார். அன்று முதல் இன்று வரை மொழிபெயர்ப்பு இல்லாமல் தான் கேரளாவில் பிரசங்கம் செய்கிறேன்.

இங்கு கர்த்தர் பெரும் அற்புதங்களை செய்தார். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

# மோடி Vs சாத்தான்

**பிதாவுக்கு** மூன்று தூதன்மார் இருந்தார்கள். அதில் பிதாவுக்கு நெருக்கமானவன் **லூசிப்பர்** என்ற தூதன். தூதர்களுக்கு சகல அற்புதங்களையும் செய்ய முடியும். ஒரு நாள் லூசிப்பர் என்ற தூதனை பரலோகத்திலிருந்து பூமிக்கு அனுப்பி ஏதேன் தோட்டத்தை பார்த்து பராமரிக்கும்படி சொன்னார். அவனும் கீழ்படிந்தான். சில காலம் சென்றபின் லூசிபருக்கு தன்னைக் குறித்து பெருமை ஏற்பட்டது. நான் மறுபடியும் பரலோகத்துக்கு போவேன். பிதாவுக்கு (கடவுளுக்கு) **சமமாவேன்** (ஒப்பாவேன்) என்று கூறினான். உடனே கடவுள் அவனை பரலோகத்திலிருந்து கீழே தள்ளிவிட்டார் (ஏசா 14:14) அப்படி தள்ளப்பட்ட தூதன் தான் பிசாசாக அலைகிறான். இப்போதும் ஆண்டவனுக்கு எதிரான காரியங்களை செய்து கொண்டிருக்கிறான்.

**2024 ம் ஆண்டு மே 23ம் தேதி** பிரதமர் **மோடி அவர்கள்** திடீரென்று **நான் சாதாரணமான பிறவி அல்ல** நான் **பயோலாஜிக்கலாக** (ஆணும் – பெண்ணுக்கும் பிறக்கவில்லை) **நான் மனிதப்பிறவி அல்ல.** கடவுளால் அனுப்பட்டவன் எனக்கு **சகல வல்லமையும் உண்டு.** சில திட்டத்துக்காக (Mission) **கடவுள் என்னை அனுப்பியிருக்கிறார்.** இன்னும் சில நாட்களில் நீங்கள் என்னில் **கடவுளின் வல்லமையை காண்பீர்கள்** என பேசியதாக செய்திகள் கூறுகிறது. தன் **கடவுளுக்கு சமமாகவும்** சர்வலோக அதிபதியாகவும் காண்பிக்க **மோடி அவர்கள்** முயலுகிறார்.

கிறிஸ்தவ வேதத்தில் கடவுளின் தூதன் லூசிப்பர் இதே எண்ணத்தோடு பேசி தான் **கடவுளுக்கு சமம் என்றான்.** உடனே கடவுள் **அவனை பிசாசாக** பூமிக்கு தள்ளிவிட்டார். கடவுளுக்கு தங்களை சமமாக நினைத்த **கிறிஸ்தவ ஊழியர்களும்,** திரு. **மோடி அவர்களும்** சீக்கிரமே பிசாசசை போல **தள்ளப்படுவார்கள்.** கடவுளுக்கு தன்னை சமமாக நினைப்பவர்களுக்கும் பெருமை உள்ளவர்களுக்கும் இது தான் கதி .....

– வேத எச்சரிக்கை

**MAY 2024**

# Printed Book (Periodical)


**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription :**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**


**Return Requested:**


**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**



Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.